நாள்- 14.09.2023

Case No.OS.5/2013 (PW1 Cross continuation)

PW.1- ராஜேஸ்வரி – 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நம்பரை கிராமத்தில் உள்ள மாடிவீடு 24.3.2003 ல் என் மாமியாருடன் சேர்ந்து அவரது மகன்கள் மற்றும் மகள்கள் சேர்ந்து கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 2003 ல் பி.வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்தை கிரையம் செய்தபிறகு 2004 ல் அருள் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் இந்த சொத்தை விற்றதில் வாங்கவில்லை ஆனால் சொத்து வாங்கினார்கள். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வேறு சொத்து வாங்குவதற்காகத்தான் கிரையம் செய்கிறோம் என்ற வாசகம் உள்ளது என்று சொன்னால் எனக்கு அதைபற்றி தெரியாது. என் மாமியார் பெயர் சகுந்தலா என்றால் சரிதான். என் மாமியார் சகுந்தலா சில சொத்துக்களை குறித்து தானசெட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. 3.11.2010 ல் வசந்தா , ஜெயபால் , கலா அனைவருக்கும் தனித்தனியாக தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியாது. நான் தானசெட்டில் மென்ட் எழுதிக்கொண்டு வேண்டுமென்றே பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்புள்ள சாட்சியம் அளித்துள்ள குறுக்கு விசாரணையில் சொத்து குறித்து பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினையில் என் மாமியாருடைய பெண்பிள்ளைகள் கருத்து எதுவும் சொல்லவில்லை அதைபற்றி எனக்கு தெரியாது. கூட்டுகுடும்பத்தில் ஆண்பிள்ளைகள், பெண்களுக்கு சமஉரிமை உண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்தானது மூதாதையர் சொத்து என்றால் சரிதான். ஐயாசாமியின் ஆண், பெண் வாரிசுகளுக்கு சொத்தில் சமஉரிமை உண்டு என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. 5 முதல் 8 பிரதிவாதிகளை வாதிகளாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்து பின்னிட்டு அவர்களை பிரதிவாதிகளாக மாற்றி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. எனவே தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.